சிவமயம்.

நூலாசிரியர் சரித்திரமும் ஆசாரக் கோவை என்னும் நூற்பயனும்.

இந்நூலாசிரியர் மதுரைச் சங்கமருவிய சான்றோரில் ஒருவராகிய பெருவாயின் முள்ளியார். இவரது காலமுதலியவற்றை உண்மையாய்த் துணிந்தறியத்தக்க ஆதாரங்கள் கிடைப்பது அருமையாயிருப்பினும், இந்நூலின் தற்சிறப்புப்பாயிரத்தில், "கயத்தூர்ப்பெருவாயின் முள்ளியென்பான்" எனக்கூறப் பட்டிருத்தலால், இவரது ஊர் கயத்தூர் என்பது, பெயர் முள்ளியார் என்பதும் விளங்குகின்றது. கயத்தூர் என்பது சோழநாட்டைச் சார்ந்த நன்னிலம் என்னும் ஊருக்கு அருகிலிருப்பதாகத் தெரியவருகின்றது. "ஆரெயின் மூன்றும் அட்டானடியேத்தி" என்று இவர் தற்சிறப்புப்பாயிரத்தில் செய்வணக்கங் கூறினமையால் இவரது சமயம் சைவம் என்று விளங்குகின்றது. இந்நூல் சங்கமருவிய நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலியவற்றோடு ஒருங்கெண்ணப்பட்ட *பதினெண்கீழ்க்கணக்கில் சேர்ந்ததாய், மதுரைக்கடைச்சங்கப் புலவர்களால் நன்குமதித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்றாதலானும், இந்நூலினின்றும் "அரசன் உவாத்தியான்" என்ற செய்யுள் திருமுருகாற்றுப்படையிலும், "வைகறையாமம்" என்ற செய்யுள் மதுரைக்காஞ்சியிலும் ஆசிரியர் நச்சினார்க்கினியார் எடுத்தாண்டமையானும், இந்நூல் அவரிருந்த காலத்துக்கு முற்பட்டதென்று புலப்படுகின்றது. இந்த ஆதாரத்தைக்கொண்டு இவரிருந்த காலம் ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முற்பட்டதென்று விளங்குகின்றது. இவர்காலத்திலிருந்த புலவர்கள் திருவள்ளுவமாலையில் உள்ள நக்கீரர் முதலிய நாற்பத்தொன்பதின்மரேயாம். ஆயின் இப்படிப்பட்ட சிறந்த நூலை இயற்றின இவர் மேற்சொல்லப்பட்ட நாற்பத்தொன்பதின்மருள் ஒருவரென்று அறியக்கூடாமையால் இவர் அவர்களிருந்த சங்கத்தில் இருந்தவர் அல்லர் என்று தோன்றுமாயினும், அக்காலத்தில் தமிழ் ஆராய்ச்சியில் வல்லவராய் நூலியற்றினோர் அந்த நாற்பத்தொன்பதின்மரேயன்றி வேறு பலபுலவர்களும் நூல்களை இயற்றி அச்சங்கத்தார் முன்னிலையில் அரங்கேற்றினதாகத் தெரியவருகின்றமையால் இந்நூலாசிரியரும் அந்தச் சங்கத்தாரொழிந்த வேறு பலபுலவருள் ஒருவராயிருக்கலாம்.

இந்நூலிற் கூறப்படுவனவாகிய பொருள்கள் யாவையெனின்? உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் முதலிய நித்திய கருமம் நடத்தும் வழியும், அரசன், தந்தைதாய், மூத்தோர், குரு, போதகாசிரியன் முதலிய பெ

ஐம்பூதம்பார்ப்பார்பசுத்திங்களுயிறு
நம்பூதமென்னுமிகழ்வானேற்றன்மெய்க்க
ணைம்பூதமன்றேகெடும்.

(இ-ள்.) பஞ்சபூதங்களையும் பார்ப்பாரையும் பசுக்களையும் சந்திரனையும் சூரியனையும் தன்னிலும் பரிசுத்தமானவைகளை று கருதாமல் ஒருவன் இகழ்வானாயின் தன்உடம்பிலுள்ள பஞ்சபூதங்களும் இகழ்ந்த அன்றே அழிந்தொழியும் என்பதாம் எ-று. (மக)

அரசனுவாத்தியான்றாய்தந்தைதம்மு
னிகரில்குரவரிவரிவரைத்
தேவரைப்போலத்தொழுதெழுகவென்பதே
யாவருங்கண்டநெறி.

(இ-ள்) அரசனும் உவாத்தியாயனும் தாயும் தந்தையும் தமையனும் ஆகிய இவர்கள் ஒப்பில்லாத குரவர்களாவார்கள் இவர்களை தேவரைத்தொழுதெழுவதுபோல தொழுதெழுகவென்பதே நல்லோர் எல்லாரும் சொல்லிய நெறியாம் எ-று. (மஉ)

குரவருரையிகந்துசெயயார்விரதங்
குறையுடையார்நீரமறவார்நிறையுவா
மெல்கோலுந்தின்னார்மரங்குறையாரென்பதே
நல்லறிவாளர்துணிவு.

(இ-ள்) புத்திமான்கள் மேற்கூறப்பட்ட குரவர்சொல்லைக்கடந்து ஒரு காரியத்தையும் செய்யமாட்டார் முடியாதுகிடந்த குறைவிரதமுடையார் மிகவும் அதனைமறந்தொழிகமாட்டார் சந்திரன் நிறைந்த உவாவின்கண் மெல்லுதற்குரிய கொம்பையும் மெல்லார் பல்லைத்துடைப்பதும் செய்யார் அந்த உவாவின்கண் மரங்களையும் குறைக்கமாட்டார் என்றுசொல்லப்படுவதே நல்லறிவுடையோரதுநிச்சயம் எ-று. (மந)

நீராடிக்கால்கழுவிவாய்பூசிமண்டலஞ்செய்
துண்டாரேயுண்டாரெனப்படுவாரல்லாதா
ருண்டார்போல்வாய்பூசிச்செல்வரதுவெடுத்துக
கொண்டாரரக்கர்குறித்து.

(இ-ள்.) குளித்துக்காலைக் கழுவி வாயைப்பூசி உண்ணுமிடத்தை மண்டலஞ்செய்துபின்பு உணவையுண்டவரோ உண்டாரென்று சொல்லப்படுவார இப்படிச்செய்யாமல் உண்டவர் விதிப்படி உண்பவரைப்போல வாய்கழுவிப போகின்றவருணவை அரக்கரானவர் குறித்து எடுத்துக்கொள்வார் என்பதாம, எ-று. (மச)

காலினீர்நீங்காமையுண்டிடுகபள்ளியு
மீரம்புலராமையேறற்கவென்பதே
பேரறிவாளர்துணிவு.

(இ-ள்.) கழுவின நீர் காலினின்று நீங்குமுன்னமே உண்ணத்தொடங்குக பாயலின் கண்ணும் கால் கழுவின ஈரம்புலராமல் ஏறுதொழிக ... செல்லப்படுவதே பேரு விளையுடையவராது துணிபொம் எ-று. (௰௫)

உண்ணுங்கால் நோக்குந்திசைகிழக்குக்கணமர்ந்து
தூங்கான் றுளங்காமைநன்கிரீஇயாண்டும
பிறிதியாதுநோக்கானுரையான்றொழுதுகொண்
டுண்கவுகாஅமைநன்கு.

(இ-ள்.) உண்ணும்போது நோக்குதற்குரிய திசை கீழ்த்திசையாகும் அவ்வாறு கீழ்த்திசைநோக்கியிருப்பினும் கண்ணமர்ந்து தூங்காதவனாய் புடைபெயராமல் திரமாயிருந்து எவ்விடத்தும் பிறிதொன்றைச் சிறிதும் நோக்காதவனாய் பேசாதவனாய் உண்ணுகின்ற உணவை வணங்கி கையாலெடுத்து சிந்தாமல் நன்றாயுண்க, எ-று. (௰௬)

விருந்தினர்மூத்தோர்பசுசிறைபிள்ளை
யிவர்க்கூண்கொடுத்தல்லா லுண்ணாரேயென்று
மொழுக்கம்பிழையாதவர்.

(இ-ள்.) எக்காலத்தும் ஒழுக்கத்தில் தவறாதவர்கள் விருந்தினரும் மிக மூத்தோரும் பசுக்களும் சிறைபட்டவர்களும் பிள்ளைகளும் ஆகிய இவர்களுக்கு உணவுகொடுத்தல்லது தாம் உண்ணமாட்டார், எ-று. (௰௭)

ஒழிந்ததிசையும்வழிமுறையானல்ல
முகட்டுவழியூண்புகழ்ந்தாரிகழ்ந்தார்
முகட்டுவழிகட்டிற்பாடு.

இ-ள்.) முன் சொன்ன கிழக்கு முகமாய் விருந்துண்ணத்தடைநேரிட்டநெறிமுறையில் அந்தக் கீழ்த்திசை ஒழிந்த மற்றைத்திசைகளும் விருந்துண்ணுதலுக்கு நன்மையுடையனவாம். வாயிலின்நேரே யிருந்து உண்ணுதலை நன்றென்று அறிஞர் புகழ்ந்தார்கள் முகட்டின் நேராக கட்டிலிட்டு அதிற்படுத்தலை நன்மையன்றென்று இகழ்ந்தார்கள் என்பதாம், எ-று. (௰௮)

கிடந்துண்ணார்நின்றுண்ணார்வெள்ளிடையுமுண்ணார்
சிறந்துமிகவுண்ணார்கட்டின்மேலுண்ணா
ரிறந்தொன்றுந்தின்னற்கநின்று.

(இ-ள்.) படுத்துண்ணலாகாது நின்றுண்ணலாகாது வெளியிடத்திருந்தும் உண்ணலாகாது விரும்பி மிக உண்ணலாகாது நெறியைக்கடந்து மிக ஒன்றையும் நின்று தின்னலாகாது, எ-று. (௰௯)

முன்றுவவாமுன்னெழார்மிக்கூறாருணின்க
ணென்பெறினுமாற்றவலமிரார்தயமிற
பெரியார்கிரவிருந்தக்கால்.

(இ-ள்.) தம்மினும் பெரியோரது பந்தியில் இருந்தால் அப்பெரியோர் உண்பதற்கு முன்னே தாம் உண்ணார் அவர்க்கு முன்னே எழுந்திரார் சொற் செலவு செய்யார் என்பதாம், எ-று. (உ0)

கைப்பனவெல்லாங்கடைதலைதித்திப்ப
மெச்சும்வகையாலொழிந்தவிடையாகத்
துய்க்கமுறைறவகையாலூண்.

(இ-ள்.) கைக்கும் கறியெல்லாம் முடிவின் கண்ணாகவும் தித்திக்கும் கறியெல்லாம் முதலாகவும் ஒழிந்த சுவையுள்ள கறிகளெல்லாம் இடையாகவும் புகழும் வகையினாலும் முறையின் வயினாலும் உணவையுண்க, எ-று. கைப்பு, என்பது கசப்பு (உ0க)

முதியவரைப்பக்கத்துவையார்விதிமுறையா
லுண்பவற்றுளெல்லாஞ்சிறியகடைப்பிடித்
தன்பிற்றிரியாமையாசாரநீங்காமை
பண்பினனீக்கல்கலம்.

(இ-ள்) தம்மினும் மூத்தாரை உண்ணும்பொழுது தம்பக்கத்து வைத் துணணார் சாத்திரவிதியின் முறைமையால் உண்ணுங்கலங்கள் எல்லாவற்றுள் ளும் சிறிய கலங்களை உறுதியாய்ப் பிடித்துக்கைக்கொண்டு அன்பில் பிழை யாத வகையும் ஒழுக்கத்தில் நீங்காத வகையும் உண்டமைந்தால் உள்ள கலங் களை முறையாக நீக்குக என்பதாம், எ-று. (உஉ)

இழியாமைநன்குமிழ்ந்தெச்சிலறவா
யடியோடுநன்குதுடைத்துவடிவுடைத்தா
முக்காற்குடித்துத்துடைத்துமுகத்துறுப்
பொத்தவகையால்விரலுறுத்திவாய்பூசல்
மிக்கவர்கண்டநெறி.

(இ-ள்.) வாயிற் கொண்ட நீர் உள்ளே புகாமல் நன்றாய் உமிழ்ந்து உண் ட எச்சில் போகும்படி வாயை வாயின் அடியோடு நன்றாகத்துடைத்து அழ குடைத்தாக மூன்றுதரம் நீர் குடித்துத் துடைத்து முகத்திலுள்ள அவயவங் களை அவற்றிற்குப் பொருந்தும் விதத்தால் விரல்களாற் பரிசித்து வாய்கழுவு தல் வாய்பூசும் வழியிற் சிறந்தவர் சொல்லிய நெறியாம், எ-று. (உ0௩)

இருகையாற்றண்ணீர்பருகாரொருகையாற்
கொள்ளார்கொடாஅர்குரவர்க்கிருகை
சொறியாருடம்புமடுத்து.

(இ-ள்.) இரண்டு கைகளாலும் முகந்தும் ஏற்றும் தண்ணீர் குடியார் குரவர் கொடுப்பவற்றை ஒரு கையால் வாங்கிக்கொள்ளார் அவர்க்குத் தாம் ஒரு கையால் கொடார் உடம்பைத் தீண்டி இரண்டு கைகளாலும் சொறியார், எ-று. (உ0௪)

அந்திப்பொழுதுகிடவார்நடவாரே
யுண்ணார்வெகுளார்விளக்கிகழார்முன்னந்தி
யல்குண்டடங்கல்வழி.

(இ-ள்.) மாலைக்காலத்தில் படுத்துக்கொள்ளார் நடத்தலும் செய்யார் ஒருவரையும் கோவியார் மாலையின் மூற்பனின்விளக்கை இகழாது ஏற்றுவார் அந்திப்பொழுதில் உண்ணுதவராய் இரவில் உண்டு புறத்திற் போகாமல் ஓரிடத்தில் அமர்ந்திருத்தல் நன்றியாம், எ-று. (உ௰ரு)

கிடக்குங்காற்கைகூப்பித்தெய்வந்தொழுது
வடக்கொடுகோணந்தலைச்செய்யார்மீக்கோ
ளுடற்கொடுத்துச்சேர்தல்வழி.

(இ-ள்.) படுக்கும்பொழுது தெய்வத்தைக் கைகுவித்துத்தொழுது வட திசையிலும் மூலைத்திசையிலும் தலைவைக்காமல் மேற்போர்வை யொன்றை உடம்பின் கண் கொடுத்து கிடத்தல் நன்னெறி யென்பதாம், எ-று. (உ௰சு)

இருதேவர்பார்ப்பாரிடைபோகார்தும்மினு
மிக்கார்வழுத்திற்றொழுதெழுகவொப்பார்க்
குடன்செல்லலுள்ளமுவந்து.

(இ-ள்.) இருதேவா நடுவிலும் பலபார்ப்பார் நடுவிலும் ஊடறுத்துப போகார் தும்மின பொழுதிலும் பெரியோர் வாழ்த்திஞல் தொழுதுகொண்டே செல்க தம்மொடு சமானமானவர்க்கு தம்மனமகிழ்ந்து நேரே செல்க என்பதாம், எ-று. (உ௰எ)

புற்பைங்கூழாப்பிசுடலைவழிதீர்த்தந
தேவகுலநிழலானிலைவெண்பலியென்
றீரைந்தின்கண்ணுமுமிழ்வோடிருபுலனுஞ்
சோரானுணர்வுடையார.

(இ-ள்.) புல் பயிர் கோமயம் மயானம் வழிமார்க்கம் தண்ணீர் கோவில மரநிழல் பசு நிற்குமிடம் சாம்பல் என்று சொல்லப்பட்ட இப்பத்திடத்தும் உமிநீரோடு மூத்திர புரீடஙகளையும் அறிவுடையோர் சோரவிடார் என்பதாம், எ-று. புரீடம் என்பது,மலம். (உ௰அ)

பகற்றெற்குநோக்காரிரவடகுநோக்கார்
பகற்பெய்யார தீயினுணீர்.

(இ-ள்.) பகற்காலத்தில் தெற்கு நோக்கியிருந்து மலசலஙகழித்தலும் இராக்காலத்தில் வடக்கு நோக்கியிருந்து கழித்தலும் பகற்காலத்தில் நெருப் பின்மேல் நீரைப்பெய்தலும் அறிவுடையோருக்கு இயலாது என்பார், எ-று.

நடைவரவுநீரகத்துநின்றுவாய்பூசார்
வழிநிலைநீருள்ளும்பூசார்மனத்தால்
வரைந்துகொண்டல்லதுபூசார்கலத்தினாற்
பெய்பூச்சுச்சீரோதெனின்.

(இ-ள்.) ஓடுகின்ற நீரில் நின்றுகொண்டும் நடந்துகொண்டும் வாயைக் கழுவார் ஓடும் நீர் பெறா இடத்தில் நிலை நீரிலும் அவ்வாறே வாய் கழுவார் கலத்தால் சிலர் வார்க்கவாயலம்புதல் முடியாதாயின் மனத்தினால் சிலர் நீர்வார்ப்பதாகப்பாவித்துக்கொண்டு வாயலம்பவேண்டும் என்பதாம், எ-று. (௩௰)

பிறர்மனைகட்களவுசூதுகொலையோ
டறனறிந்தாரிவ்வைந்துநோக்கார்-திறனிலொன்
றெள்ளப்படுவதூஉமன்றிநிரயத்துச்
செல்வழியுய்த்திடுதலால்.

(இ-ள்.) பிறர் மனைநோக்குதல் முதலியவற்றை ஒருவர்செய்தால் அவர் நற்குணமிலரொன்று பலரால் இகழப்படுதலேயன்றி நரகத்தில் செல்லும்நெறியின் கண் செலுத்துதலால் பிறர் மனையாளும் கள்ளும் களவும் சூதும் கொலையும் ஆகிய இவ்வைந்தினையும் தருமமார்க்கத்தை யறிந்தவர் மனத்தால் நினைத்தலும் செய்யாரென்பதாம், எ-று. (௩௧)

பொய்குறளைவெளவலழுக்காறிவைநான்கு
மையந்தீர்காட்சியார்சிந்தியார்சிந்திப்பி
னையம்புகுவித்தருநிரயத்துய்த்திடூந
தெய்வமுஞ்செற்றுவிடும்.

(இ-ள்.) பொய்யும் கோளும் பிறர் பொருளை அபகரிக்கவேண்டுமென்னும் ஆசையும் பிறர் ஆக்கத்தில் பொறாமையும் ஆகிய இந்நான்கினையும் சந்தேகம் நீங்கின அறிவினையுடையார் நினையார் நினைப்பாராயின் அவரை பிச்சைபுகுவித்து அரியநரகத்தில் செலுத்திவிடும் தெய்வமும் கெடுத்துவிடும் என்பதாம், எ-று. (௩உ)

தமக்கென்றுலையேற்றார்தம்பொருட்டூன்கொள்ளா
ரடுக்களையெச்சிற்படாஅர்மனைப்பலி
யூட்டினமைகண்டுண்கவுண்.

(இ-ள்.) தமக்கென்று உலைவையார் தெய்வத்தின் பொருட்டன்றித் தம்பொருட்டு ஒருயிரைக்கொன்று அதன் தசையைக் கொள்ளார் மடைப்பள்ளியை எச்சிலாக்கார் மனைவாழுந் தெய்வங்களுக்குப் பலியூண்பித்தமையை அறிந்து பிறகு தாம் உணவை யுண்கவேண்டும் என்பதாம், எ-று. ஆதுலர் முதலியோர்க்கென்று உலைவைத்தல் அறநெறியாதலால் தமக்கென்று உலை ஏற்றார். (௩௩)

உயர்ந்ததின்மேலிரா ருள்ளமழிவுசெய்யா
ரிறந்தின்றுசெய்தக்கடைத் துங்குரவ
ரிளங்கிளைகளுண் ணுமிடத்து.

(இ-ள்.) தமக்கு இளைய சுற்றத்தார் உண்ணுங்காலத்தில் பெரியோர் உயர்ந்த பீடத்தின் மேல் இரார் அக்கிளைகள் முறைமை கடந்து குற்றத்தை செய்தபோதும் அவர் மனம் வருந்துவனவற்றையும் செய்யார் என்பதாம், எ-று. (௧௪)

கண்ணெச்சில்கண் ணூட்டார்காலோடுகாறேயார்
புண்ணியமாய தலையோடு றுப்புறுத்த
நுண்ணிய நூலறிவினார்.

(இ-ள்.) நுட்பமாகிய நூலறிவினையுடையவர் ஒருவன் கண்ணுக்கு மருந்து ஊட்டின கோலைக்கொண்டு தம் கண்ணுக்கு மருந்தூட்டார் தமது ஒரு காலாலே மற்றொரு காலைத்தேயார் புண்ணியமாகிய பொருள்களை தலையிலும் கண்ணுமுதலிய உறுப்புகளிலும் ஒற்றிக்கொள்க என்பதாம், எ-று. (௧௫)

நாழிமணைமேலிரியார்மணைகவிழார்
கோடிகடையுள்விரியார்கடைத்தலை
யோராதுகட்டிற்படா அராறியாதார்
தந்தலைக்கணில்லாவிடல்.

(இ-ள்.) நாழியை மணையின்மேல் வையார் மணையைக் கவிழ்த்துவை யார் தலைவாயிலில் கோடியாடையைப் பிரித்துவிரியார். ஆராயாமல் தலை வாயிலில் கட்டிலிட்டுப்படுக்கார் தம்மையறியாதவர்க்கெதிரில் நில்லாது ஒழிக என்பதாம், எ-று. (௧௬)

துடைப்பந்துகட்காடுபுல்லிதழ்ச்செத்தல்
கருங்கலங்கடடில்கிழிந்ததனோடைந்தும்
பரப்பற்கபந்தரகத்து.

(இ-ள்.) துடைப்பமும். துகளோடுங்கூடிய செத்தையும் பூவின்புற விதழும் பழய கருங்கலங்களும் கிழிந்த கட்டிலும் ஆகிய இவ்வைந்தினையும் மணப்பந்தலின்கீழ் பரப்பா தொழிக வென்பதாம், எ-று. (௧௭)

காட்டுக்களைந்துகலங்கழீஇயில்லத்தை
யாப்பினீரெங்குந்தெளித்துச்சிறுகாலை
நீர்ச்சால்கரகநிறையமலரணிந்
தில்லம்பொலியவடுப்பினுட்டீப்பெய்க
நல்லதுறல்வேண்டுவார்.

(இ-ள்) நல்லதாகிய செல்வத்தை அடையவிரும்புவோர் இறுகாலையில் எழுந்து வீட்டிலுள்ள செத்தையைக் களைந்து கரிய கலங்களைக்கழுவி வீட்டின் எவ்விடத்திலும் பசுவின் சாணநீர் தெளித்து நீர்ச்சாலிலும் கரகத்திலும் நிறைவாகமலரைத் தரித்து வீட்டினிடத்தும் பொலியும்படி அடுப்பில் நெருப்பையுண்டாக்குக என்பதாம், எ-று. ஆ-பசு-பி-சாணம். (ஙஅ)

அட்டமியுமேனையுவாவும்பதினான்கு
மப்பூமிகாப்பார்க்குறுகண்ணுமிக்க
நிலத்துளக்குவிண்ணதிர்ப்புவாரா மைபார்ப்பா
ரிலங்குநூலோதாதநாள்.

(இ-ள்.) அட்டமி நாளும் பின்னும் உவாநாளும் சதுர்த்தசியும் தாமிருக்கும் அந்நிலங்காக்கும் அரசர்க்கு ஆபத்துக்காலமும் மிகுதியாகிய பூகம்பநாளும் இடி முழங்கு நாளும் தாம் அசுத்தமாயிருக்கின்றநாளும் ஆகிய இந்நாட்களில் வேதியர் வேதம் ஓதாத நாட்களென்பதாம், எ-று. உவா என்பது அமாவாசையும் பௌர்ணமி என்னும் இரண்டு பொருளையும் தருகின்றசொல்-பூகம்பம்-பூமி-நடுங்குதல். (ஙக)

கல்லியாணந்தேவர்பிதிர் விழாவேள்வியென்
றைவகைநாளுமிகழாதறஞ்செய்க
பெய்கவிருந்திற்குங்கூழ்.

(இ-ள்.) தான் செய்யுங் கல்லியாண நாள் தேவர்க்குச் சிறப்புச்செய்யுநாள் பிதிரர்களுக்குச் சிறப்புச்செய்யுநாள் திருவிழாநாள் யாகஞ்செய்யும்நாள் என்று சொல்லபட்ட இவ்வைந்துநாளிலும் மறவாமல் கொடையறம் செய்க விருந்தினருக்கும் சோறிடுக என்பதாம், எ-று. (சல)

உடைநடைசொற்சோர்வுவைதலிந்நான்கு
நிலைமைக்குங்கல்விக்குமாண்மைக்குந்தத்தங்
குடிமைக்குந்தக்கசெயல்.

(இ-ள்.) உடையும் நடையும் சொற்சோர்வும் வைதலும் ஆகிய இந்த நான்கும் தாம் அரசனால் சிறப்புப் பெற்றமைக்கும் தம்கல்விக்கும் தம்ஆண்மைக்கும் குடிப்பிறப்பிற்கும் தகுதியாகச்செய்கவென்பதாம், எ-று. (சக)

பழியாரிழியார்பலருள்ளுறங்கா
ரிசையாதநேர்ந்துகரவாரிசைவின்றி
யில்லாரையெள்ளியிகந்துரையார்தள்ளியுந்

(இ-ள்.) பிறரால் மாறுபடுதலில்லாத கேள்வியையுடையார் தமக்கு இயன்றும் பலர் நடுவிலிருந்து பிறரைப்பழித்துரையார் இகழ்ந்துரையார் பலர் நடுவிலிருந்து தூங்கார் தமக்கு இசையாத காரியங்களை பிறர்க்குச் செய்வோமென்று உடம்பட்டு செய்யாதொழியார் தகுதியில்லாமல் வறியாரை யிகந்து முறைகடந்து பேசார் என்பதாம், எ-று. (சஉ)

மின்னொளியுமவீழ்மீனும்வேசையர்கள்கோலமுந்
தம்மொளிவேண்டுவார்நோக்கார்பகற்கிழவோன்
முன்னொளியும்பின்னொளியுமற்று.

(இ-ள்.) தமது விளக்கத்தை விரும்புவோர் மின்னொளியையும் வீழ் மீனையும் வேசையர்கள் கோலத்தையும் நோக்கமாட்டார் சூரியனுடைய காலை ஒளியையும் மாலை ஒளியையும் அப்பெற்றியாகவே நோக்கமாட்டார் என்பதாம், எ-று. (௪௩)

படிறும்பயனிலவும்பட்டியுரையும்
வசையும்புறனுமுரையாரோவென்று
மசையாதவுள்ளத்தவர்.

(இ-ள்.) எக்காலத்தும் தளராத மனத்தினையுடையார் வஞ்சகச்சொல்லையும் பயன்படாத சொல்லையும் வாய்க்காவாமல் வேண்டியவற்றைசொல்லும் சொல்லையும் பிறனை பழித்துச்சொல்லுஞ் சொல்லையும் இவைபோன்ற மற்றைச்சொல்லையும் சொல்லார் என்பதாம், எ-று. (௪௪)

தெறியொடுகல்லேறுவீளைவெளியே
விகிர்தங்கதங்காத்தல்கைபுடைதோன்ற
வுறுப்புச்செகுத்தலோடினனவையெல்லாம்
பயிற்றார்நெறிப்பட்டவர்.

(இ-ள்.) நன்னெறிப்பட்டவர் தெறித்தலும் கல்லெறிதலும் கனைத்தல் முதலியவற்றைச்செய்தலும் தூரப்போகின்றவனொருவனை அழைத்தலும் ஒருவன் செய்வகைசொல் முதலானவற்றைதானும் அவ்வகை இகழ்ந்து (செய்து காட்டலும்) வேகமுடையனாதலும் ஒளித்தலும் கையோடுகைபுடைத்தலும் பிறர்க்குவெளிப்படகண்ணிடுதல் முதலாயினசெய்து தன் உறுப்பைச்செகுத்தலும் ஆகிய இத்தன்மையவாகிய எல்லாவற்றையும் மிகுதியாகச்செய்யார் என்பதாம், எ-று. (௪௫)

முறுவலினிதுரைகானீர்மணைபாய்
கிடக்கையோடிவ்வைந்துமென்பதலைச்சென்றார்க்
கூடொணுசெய்யுஞ்சிறப்பு.

(இ-ள்.) தம்மிடத்துவந்தவர்க்கு உணவோடுசெய்யவேண்டிய சிறப்புகளாவன முறுவலோடுகூடின இன்சொல்லும் கால்கழுவநீரும் இருக்கமணையும் கிடக்கப்பாயும் கிடக்கையோடுகிடக்கும் இடமும் ஆகிய இவ்வைந்துமேயாம் என்றுசொல்லுவர் பெரியோர்என்பதாம், எ-று. (௪௬)

கருத்தபகைமுனையுங்கள்ளாட்டுக்களனு
நிறுத்தமனமில்லார்சேரியகத்துங்
குணநோக்கிக்கொண்டவாகோள்விட்டுழியு
நிகரிலறிவினார்வேண்டார்பலர்தொகு
நீர்க்கரையுநீடுநிலை.

(இ-ள்.) ஒப்பற்ற அறிவினையுடையார் வெகுண்டபகைமுனையிலும் கள்ளுண்டு களித்தாடுமிடத்திலும் பொதுமகளிர்சேரியிலும் தம்குணங்களை ஆராய்ந்து தம்மைவிரும்பிக்கொண்டார் கோட்பாடுவிட்ட இடத்திலும் பலர்கூடும் நீர்க்கரையிலும் நெடுநேரம் நிற்கையைவிரும்பார் என்பதாம், எ-று. (௬௰௭)

முளிபுல்லுங்கானமுஞ்சேரார்தீக்கூட்டார்
துளிவீழக்கால்பரப்பியோடார்தெளிவிலாக்
கானந்தமியரியங்கார்துளியஃகி
நல்குரவாற்றப்பெருகினுஞ்செய்யாரே
தொல்வரவிற்றீர்ந்ததொழில்.

(இ-ள்.) அறிவுடையோர் முதிர்ந்தபுல்லுள்ள இடத்திலும் முதிர்ந்த காட்டுள்ள இடத்திலும் சேர்ந்திருக்கமாட்டார் அவற்றை நெருப்பிட்டுக் கொளுத்தார் மழைபெய்யும்போது காலைப்பரப்பி ஓடார் வழிதுறையறியப்படாத காட்டில்த்தனித்துப்போகமாட்டார் மழைகுறைந்து வறுமைமிகுந்தாலும் பிழைக்கநடவார் என்பதாம், எ-று. (௬௰௮)

பாழ்மனையுந்தேவகுலனுஞ்சுடுகாடு
மூரில்வழியெழுந்தவோர்மரமுந்தமரனுந
தாமேதமியர்புகாஅர்பகல்வளரார
நோயின்மைவேண்டுபவர்.

(இ-ள்.) பிணியில்லாமையை விரும்புவோர் குடியில்லாத வீட்டிலும் தேவாலயங்களுள்ளும் சுடுகாட்டிலும் ஊரில்லாத இடத்துண்டாகிய தனிமையாகியபழயமரத்திலும் அறிவின்றித் துணையோடல்லதுபோகார் பகலில் உறங்கார் என்பதாம், எ-று. (௬௰௯)

எழுச்சிக்கட்பிற்கூவார்தும்மார்வழுக்கியு
மெங்குற்றுச்சேறிரோவென்னாரேமுன்புக்
கெதிர்முகமாநின்றுமுரையாரிருசாரவுங்
கொள்வர்குரவர்வலம

(இ-ள்.) அறிவுடையோர் "ஒருவர் எழுந்துபோகத்தொடங்கும்போது அவரைபின்னேநின்று அழையார் அப்போதுதும்முவதுஞ்செய்யார் மறந்தும் எங்குப்போகின்றீரென்றுசொல்லார் முன்னேபுகுந்து எதிர்முகமாக நின்றும் ஒன்றைச்சொல்லார் அவர்க்கு இருமருங்கும்நின்றுசொல்வார் தம் குரவர்போகும்போது வலமாகப்போவார் என்பதாம், எ-று. (௭௰)

உடம்புநன்றென் றுரையாரூதார் விளக்கு
மடுப்பினுட் டீநந்தக்கொள்ளா ரதனைப்
படக்காயார் தம்மேற்குறித்து.

(இ-ள்.) பிறரைப்பார்த்து உடம்பு நன்றாயிருந்ததென்றுசொல்லார் விளக்கினையும் வாயாலே ஊதி அவியார் அட்டில் அடுப்பின்கண் நெருப்பு அவியச்செய்யார் அந்தநெருப்பின்சுடரை தம்மீதுபடும்படி குளிர்நீங்கக்கருதிக்காயார் என்பதாம், எ-று. (௫௰க)

யாதொன் றுமேறார்செருப்புவெயின் மறையா
ரான்றவிந்தமூத்தவிழுமியார் தம்மோடங்
கோரா றுசெல்லுமிடத்து.

(இ-ள்.) கல்வி கேள்வி அறிவொழுக்கங்களால் நிறைந்தமைந்த தம்மினும்மூத்தமேலோர் தம்முடனே ஒரு பிரயாணமாகச்செல்லுமிடத்து யாதொன்றின்மேலும் ஏறிப்போகார் செருப்புத்தரியார் ஒன்றினால் பிறர்தம்மேல் வெயில்மறைக்கப்போகார் என்பதாம், எ-று. (௫௰உ)

வான் முறையான் வந்தநான் மறையாளரை
மேன் முறைப்பாற்றங்குரவரைப்போலொழுக
னூன் முறையாளர் துணிவு.

(இ-ள்.) பரிசுத்தமானமரபில்வந்த நால்வேதமூர்த்திகளாகியவேதியரை மேலாகியமுறைத்தன்மையுடைய தம்குரவரைப்போலக்கொண்டு ஒழுகுதல் நூல்முறையறிந்தவரது துணிவாம் என்பதாம் எ-று. வால்-பரிசுத்தம் (௫௰௩)

கால்வாய்த்தொழுவுசமயமெழுந்திருப்
பாசாரமென்பகுரவர்க்கிவையிவை
சாரத்தாற்சொல்லியமூன்று.

(இ-ள்.) காலின் கண் தொழுதலும் நன்றென்றசமையத்தின்கண் நிற்றலும் அவரைக்கண்டால் எழுந்திருத்தலும் என்றுசொல்லப்பட்ட இவை குரவர்க்குச்செய்யும் ஆசாரம் என்றுசொல்லுவர் நல்லோர் இவைமூன்றுமே குரவர்க்குச்சொல்லிய ஆசாரம்பலவற்றுள்ளும் சிறந்தனவாகக்கொண்டு சொல்லப்பட்டன என்பதாம், எ-று. சாரம்-ஆசாரம். (௫௰௪)

துறந்தாரைப்பேணலுநாணலுந்தாங்கற்ற
மறந்துங்குரவர்முற்சொல்லாமைமூன்றுந்
திறங்கண்டார்கண்டநெறி.

(இ-ள்.) அருந்தவரைப்பாதுகாத்தலும் நாணுதலும் தாம் கற்றவற்றை பெரியோர்முன் மறந்தாயினும்சொல்லாமையும் என இம்மூன்றும்திறப்பட அறிந்தார் அறிந்த நெறி என்பதாம், எ-று. (௫௰௫)

பாரபபார் தவரோசுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தாரிளையார்பசுப்பெண்டிரொனறிவாகட்
காற்றவழிவிலங்கிஞரோபிறப்பினுட்
போற்றியெனப்படுவார்.

(இ-ள்.) பார்ப்பாரும் தவசியரும் சுமந்தவரும் பிணிப்பட்டவரும் தம் மின்மூத்தவரும் பிள்ளைகளும் பசுக்களும் பெண்டிரும் என்றுசொல்லப்பட்ட இவர்களுக்கு மிகவும் வழிகொடுத்துவிலகிப்போனவரோ தாம்பிறக்கும்பிறப்பு களுள் பிறரால் வணங்குதற்குரியார் என்றுசொல்லப்படுவோர் என்பதாம், எ-று. (௫௰௬)

ஈன்றாண்மகடன்னுடன்பிறந்தாளாயினுஞ்
சான்றோர்தமித்தாவுறையற்கவைமபுலனுந்
தாங்கறகரிதாகலான்.

(இ-ள்.) தாயோடாயினும் மகளோடாயினும் உடன்பிறந்தாளோடாயி னும் சான்றோர்தனிமையாக உறையாதொழிக ஐம்புலன்களையும் தடுத்தற்கரி தாதலால் என்பதாம், எ-று. உறையாதொழிக என்றது வசிக்கலாகாது. (௫௰௭)

கடைவிலக்கிற்காயார்கழிகிழமைசெய்யார்
கொடையளிககட்பொச்சாவாரகோலநோசெயயா
ரிடையறுத்துப்போகிப்பிறனொருவற்சேரார்
கடைபோகவாழ்துமெனபார்.

(இ-ள்.) முன்போலப்பின்னும் கடைபோகவாழ்வோமென்று நினைப்ப வர் அரசனாயிலில்தடையுண்டானால் கோபித்துகாயார் அரசரோடுமிக்க உரி மையை அவர் பொறுக்காதவகையாகச்செய்யார் தமக்கு ஒன்றைக்கொடுக்குமி டத்தும் அவர்தம்மை தலையளிசெய்யுமிடத்தும் தமக்கு அவைபற்றாவென்று இகழார் அரசனைநீக்க அழகுசெய்துகொள்ளார் அரசனிருந்தசபையின்கண் ஊடறுத்துப்போய்பிறனொருவனைச்சேர்ந்திரார் என்பதாம், எ-று. (௫௰அ)

தமக்குற்றகட்டுரையுநதமமிற்பெரியா
ருரைத்ததற்றுறவுரையுமஃதன்றிப்
பிறர்க்குற்றகட்டுரையுஞ்சொல்லற்கசொல்லின்
வடுக்குற்றமாகிவிடும்.

(இ-ள்.) தமக்குப்பொருத்தமான உறுதிச்சொற்களையும் தம்மினும்பெரியவராக அரசனால் சிறப்புச்செய்யப்பட்டவர் சொல்லுதற்குப்பொருந்தின சொல்லியசொற்களையும் அதுவேயன்றி பிறர்க்கு உறுதியைத்தருகிற உறுதிச்சொற்களையும் அரசருக்குச்சொல்லற்க சொல்லுவாராயின் தமக்குவடு உண்டாகுங் குற்றமாம் என்பதாம், எ-று. (௫௰௯)

பெரியாருவப்பன தாமுவவாரில்லிஞ்
சிறியாரைக்கொண்டுபுகா அ— ரறிவறியாப்
பிள்ளையேயானுமிழித்துரையார் தம்மோ
டளவளாவில்லாவிடத்து

(இ-ள்.) பெரியோர் விரும்புவனவற்றை தாம் விரும்பார் , ர் வீட்டின் கண் கீழ்மக்களை அழைத்துக்கொண்டுபோகார் தம்முடனே கலத்தல் இல்லாத இடத்து அறிவினை அறியாத பிள்ளையேயாயினும் இழிவாகப்பேசார் என்பதாம், எ-று. (௬௰)

முனியார் துனியார் முகத்தெதிர் நில்லார்
தனிமை யிடத்துங் கட்டுரைஞ்சொல்லா
ரினியவையாமறிதும் மன்னர்கசிவின்று
காக்கைவெள்ளென்னுமெனின்.

(இ-ள்.) அரசன் செய்பவற்றை வெறுக்கமாட்டார் அவனோடு பகையார் நேர்முகமாய் எதிர்நில்லார் அரசன் தனியாய் நின்ற இடத்திலே த காரியத்தைச்சொல்லார் இனிமையான பொருள்களை நாங்கள் அனுபவி ற அறிந்திருக்கின்றோம் எனறு அரசர்க்குச்சொல்லார் காகம் வெண்மையாயிருக்குமென்று அரசன் சொன்னாலும் அவன் மேல் அன்பில்லாமல் வெறுத்துக்கொள்ளமாட்டார் என்பதாம், எ-று. (௬௧)

உமிவுமுயாந துழியேறலுமபாக்கும்
வகையிலுரையுமவளர்ச்சியுமைந்தும
புணராரபெரியாரக

(இ-ள்.) உமிதலும் உயர்ந்த இடத்தில் ஏறியிருத்தலும் பாக்குத்தின்னலும் தகுதியற்ற வார்த்தையும் உறங்குதலும் ஆகிய இவ்வைந்தினையும் அரசர் முன்பு செய்யார் என்பதாம், எ-று. (௬௨)

இறைவர்முற்செல்வமுங்கல்வியுந்தேசுங்
குணனுங்குலமுடையார்கூறார்பகைவர்போற்
பாரித்துப்பல்காற்பயின்று.

(இ-ள்.) உயர்ந்த குடிப்பிறந்தார் தமக்குத் துன்பஞ்செய்யும் பகைவர் போல்விரித்து அரசர்க்கெதிரில் தமது செல்வத்தையும் கல்வியையும் தமது ஒளியையுங்குணத்தையும் பலதரம்நெருங்கிச்சொல்லார் என்பதாம், எ-று. (௬௩)

பெரியார்மனையகத்துந்தேவகுலத்தும்
வணங்கார்குரவரையுங்கண்டாலணங்கொடு
நேர்பெரியார்செல்லுமிடத்து.

(இ-ள்.) அரசர் மனையிலும் தேவாலயத்திலும் பெரியோரையாயினும் பார்த்தால்பணியமாட்டார் தெய்வங்கள் புறப்பட்டு உலாவருங்காலத்தும் அந்த அரசர்களை ஒத்த அரசர் புறப்பட்டு உலாவருங்காலத்தும் பார்த்தாலும் பணியார் என்பதாம், எ-று. அணங்கு என்பது தெய்வம் (௬௪)

நகையொடுகொட்டாவிகாறிப்புத்தும்ம
லிவையும்பெரியார்முற்செய்யாரேசெய்யி
னசையாதுநிற்கும்பழி.

(இ-ள்.) நகைத்தலோடு கொட்டாவியையும் காறியுமிழ்தலும் தும்முதலும் ஆகிய இவற்றையும் அரசர் முன்பு செய்யமாட்டார் செய்யின் நிலைபெறும் பழியானது தெய்வத்தைவிட்டு நிலைபெயராது என்பதாம், எ-று. (௬௫)

நின்றக்காணிற்கவடக்கத்தாலென்பறு
மிருந்தக்காலேவாமையேகார்பெருந்தக்கார்
சொல்லிற்செவிகொடுத்துக்கேட்டீகமீட்டும்
வினவற்கசொல்லொழிந்தக்கால்.

(இ-ள்.) நன்மாணுக்கர் எந்நாளும் ஆசிரியர்முன் அடங்கி ஒழுகவேண்டுதலால் அவர்பாடஞ்சொல்லுதலை நிறுத்தினால் தாமும்நிற்கக்கடவர் அவர்முன் இருந்தபோது அவர் எழுந்துபோவென்று ஏவுதற்குமுன்னே எழுந்துபோகார் அவர்பாட முதலியவற்றைச்சொன்னால்காதுகொடுத்துகேட்டிடுக அவர்யாதொன்றும் சொல்லாவிடின் மறுபடியும் தாமும் வினவாதிருக்கக்கடவர் என்பதாம், எ-று. (௬௬)

உடுக்கையிகவார்செவிசொறிண்டார்கைமே
லெடுத்துரையார்பெண்டிர்மேனோக்கார்செவிச்சொல்லுங்
கொள்ளார்பெரியாரகத்து.

(இ-ள்.) பெரியோரது சபையில் ஆடையைக் களையார் காதைச்சொறியார் கையைமேலே தூக்கிப்பேசார் மாதர்களை நோக்கார் பிறர் தம்செவியில்ச் சொல்லும் சொல்லையும் கேளார் என்பதாம், எ-று. (௬௭)

விரைந்துரையார்மேன்மேலுரையார்பொய்யாய
பரந்துரையார்பாரித்துரையாரொருங்கெனைத்துஞ்
சில்லெழுத்தினாலேபொருளடங்கக்காலத்தாற்
சொல்லுகசெவ்வியறிந்து.

(இ-ள்) ஒருவரிடத்து ஒன்றைச் சொல்லும்பொழுது கடுகிப்பேசார் மேன்மேலும் பொய்யான சொற்களை விரைவாகப்பேசார் தாம் சொல்லும் சொற்களை விரிவாகச்சொல்லார் எவ்லாவற்றையும் ஒன்றாக சிலஎழுத்துக்களாலேபொருள் விளங்கும்வகை காலத்தோடு சமையத்தையும் அறிந்து பேசுக என்பதாம், எ-று. (௬௯)

தம்மேனிநோக்கார் தலையுளரார் கைந்நொடியா
ரெழுமேனியாயினுநோக்கார் தலைமகன்
றம்மேனியல்லாற்பிற.

(இ-ள்.) நற்குலப்பெண்டிர் தம்கணவருடைய உடம்பின் அழகையன்றி மற்றையாடவரது மேனிஎவ்வளவு அழகுடையனவாயினும் பாரார் தம் உடலின் அழகையும் நோக்கார் தலைமயிரைக்கோதார் கைநொடித்தல் முதலியற்றைசெய்யார் என்பதாம், எ-று. (௬௬)

பிறரொடுமந்திரங்கொள்ளாரிறைவனைச்
சாரார்செவியோரார்சாரிற்பிறிதொன்று
தேர்வார்போனிற்கதிரிந்து.

(இ-ள்.) அறிவுடையோர் பிறரோடுகூடஇருந்து ஒன்றனை மறைவாக ஆராயார் அரசனைச்சாரநில்லார் அரசன் பிறன்ஒருவனுக்குச்சொல்லும் சொல்லை தம்காதினால்கேளார் சமீபத்திலிருந்தால் வேறொன்றைஆராய்வார்போலமுகந்திரிந்துநிற்க என்பதாம், எ-று. (௭0)

துன்பத்துட்டுன்புற்றுவாழ்தலுமின்பத்து
ளின்பவகையானொழுகலு—மன்பிற்
செறப்பட்டாரில்லம்புகாமையிம்மூன்றுஞ்
சிறப்பட்டார்கண்ணேயுள.

(இ-ள்.) துன்பம்அடையுங்காலத்தில் அத்துன்பத்தைபொறுத்துவாழ்தலும் இன்பகாலத்தில் பிறர்க்கு இன்பம்செய்யும்வகையால் இன்புற்றுநடத்தலும் அன்பினின்றும் வேறுபட்டவரதுவீட்டில் புகாமையும் ஆகியஇந்தமூன்றும் ஒரு நல்வழிப்பட்டவரிடத்தே உள்ளவாம்என்பதாம், எ-று. (௭௧)

தெறுவந்துந்தங்குரவர்பேருரையாரில்லத்
துறுமிநெடிதுமிரார்பெரியாரை
யென்றுமுறைகொண்டுகூறார்புலையரையு
நன்கறிவார்கூறார்முறை.

(இ-ள்.) நன்மையை அறிவாராகியஅறிஞர் தாம்வெகுண்டாராயினும் தம்குரவர்பெயரைச்சொல்லார் தம்வீட்டில் தம்மனையாளைமிகவும்கோபித்துநெடுநேரமும்வீட்டில்இரார் எந்நாளும் தம்மிற்பெரியாரை முறைப்பெயர்கொண்டு அழையார் புலையரையும் முறைப்பெயர் கொண்டு அழையார் என்பதாம், எ-று. (௭௨)

புழைக்கடைப்புக்கா ரரசன்கோட்டியுரிமை
யிவற்றுக்கட்செவ்வியார்நோக்காரேயவ்வத்
தொழிற்குரியரல்லாதவர்.

(இ-ள்.) அவ்வத்தொழிற்குரியர் அல்லாதவருள் நல்லோர் பிறர்வீட்டில் புழைக்கடைவாயில் வழியாக நுழையார் அரசன் கூட்டத்தோடுகூடிகூத்துமு தலியவற்றால் இன்புறுகின்றஇடம் மனைவியோடிருக்குமிடம் என்னும் இவ்வி டங்களில் பாரார்என்பதாம், எ-று. (எ௩)

வண்ணமகளிரிடத்தொடுதம்மிட
மொளவியமென்பாரிடங்கொள்ளார்தெள்ளி
மிகக்கிழமையுண்டெனினுமவேண்டாவேபெண்டிர்க்
குவப்பவவேறாய்விடும்.

(இ-ள்.) யாம் அறிவுடையோம் எனத் தம்மைக்கருதுவோர் கோலம் செய்யும் மகளிருடைய இடத்தொடு சேர்ந்த தம்மிடத்தை சிறந்த இடமாகக் கொள்ளார் தெளிவுற்று மிகுதியும் உரிமையுண்டாயிருப்பினும் தம்மனைவிய ரது மனவிருப்பம்வேறுபடும் என்பதாம், (எ-று.) (எச)

நிரல்படச்செல்லார்நிழன்மிதித்துநில்லா
ருரையிடையாய்ந்துரையாரூர்முனிவசெய்யா
ரரசர்படையளவுஞ்சொல்லாரேயென்றுங்
கடைபோகவாழ்துமென்பார்.

(இ-ள்.) எந்நாளும் ஒருதன்மையராய் வாழ்வோமென்பவர் ஒருவர்பக்க த்தில் வரிசைப்படப்போகார் ஒருவருடைய நிழலைமிதித்துக்கொண்டு நில்லார் முன்னே ஆராய்ந்தன்றி பேசும்போது ஆராய்ந்துபேசார் ஊரிலுள்ளவர்கள் வெறுக்கத்தக்கவைகளைச் செய்யார் அரசரதுபடையினளவை பகைவருக்குச் சொல்லார் என்பதாம், எ-று. (எ௫)

அளையுறைபாம்புமரசுநெருப்பு
முழையுறைசீயமுமென்றிவைநான்கு
மிளையவெளியபவின்றவென்றெண்ணி
யிகழினிழுக்கந்தரும்.

(இ-ள்.) புற்றில்வாழ்கின்ற பாம்பும் அரசனும் தீயும் குகையில்வாழ்கி ன்றசிங்கமும் என்று சொல்லப்பட்ட இந்நான்கினையும் இளையன என்றும எளியன என்றும் பழகினவையென்றும் நினைத்து இகழ்ந்தால் அவைதுன்பத் தைச்செய்வனவாம் என்பதாம், எ-று. (எசு

அறத்தொடுகல்யாணமாள்வினைகூறை
இறப்பப்பெருகியக்கண் ணும்—திட்பட்டார்
மன்னரின்மேம்படச்செய்யற்கசெய்பவேன
மன்னியசெல்வங்கெடும்.

(இ-ள்.) தெளிவுபட்டவராகிய அறிவுடையோர் செல்வத்தால் மிகவும் பெருக்கமடைந்தாராயினும் அறத்தினையும் கல்யாணத்தினையும் முயற்சியை யும் உடையினையும் அரசரினும் மேற்படச்செய்யாதொழிக செய்வாராயின் தம் மிடத்தில் நிலைபெற்றிருக்கின்ற செல்வம் அழியும் என்பதாம் எ-று. (௭௭)

உண்டதுகேளார்குரவரைமிக்காரைக்
கண்டுழிக்கண்டாமநிரியாாபுலையரையு
முண்டதுகேளாாவிடல்.

(இ-ள்.) ஐங்குரவரையும் சான்றோரையும் கண்டபொழுதின்கண் அவ ரைவழிபட்டு ஒழுகவேண்டிய ஒழுக்கத்தில் மாறுபடார் அவர் உண்ட உண வைகுறித்து வினவார் கீழ்மக்களையும் உண்ட உணவைக் குறித்து வினவா தொழிக என்பதாம, எ-று. ஐங்குரவர் என்பது இராசா, குரு, தமையன், பிதா, மாதா. தாமம் என்பது ஒழுக்கம். (௭௮)

கிடந்தாரைக்கால்கழுவார்பூப்பெய்யார்சாந்த
மறந்தானுமெஞ்ஞான்றுமப்பூசார்கிடந்தார்க
ணில்லாரங்கட்டின்மிசை.

(இ-ள்.) எந்நாளும் அழகிய கட்டிலின்மேல் படுத்திருப்பவரது காலைக் கழுவார் அவருக்குப்பூச்சூட்டார் மறந்தாயினும் சந்தனம்பூசார் படுத்திருப்பவ ர்க்கு அருகில் நில்லார் என்பதாம், எ-று. (௭௯)

உதவிப்பயனுரையாருண்டிபழியா
ரறத்தொடுதானோற்றநோன்புவியவார்
திறத்துளிவாழ்துமெனபார.

(இ-ள்) பெரியோருடைய ஒழுக்கத்தை நினைந்து அவ்வாறு வாழ்வோ மென்றெண்ணுவோர் தாம ஒருவருக்குச்செய்த நன்றியின்பயனைச்சொல்லார் த மக்கு ஒருவரிட்ட உணவை இகழ்ந்துரையார் தாம்செய்த அறத்தையும்நோற்ற நோன்பினையும் புகழ்ந்துரையார் என்பதாம் எ-று. (௮0)

எய்தாதவேண்டாரிரங்காரிழந்ததற்குக்
கைவாராவந்தவிடுச்கண்மனமழுங்கார்
மெய்யாயகாட்சியவர்.

(இ-ள்.) உண்மையாகிய அறிவினையுடையவர் தமக்குக் கிடைத்தற்கரி தானவற்றை விரும்பார் தம்மால் இகழப்பட்டவற்றிற்கு வருந்தார் தமக்குப் பழக்கமில்லாமல் நேர்ந்ததுன்பத்திற்கு மனம்கலங்கார் என்பதாம், எ-று. கை வாரல் என்பது பழக்கம். (௮௧)

தலைக்கிட்டபூமோவார்மோந்தபூச்சூடார்.
பசுக்கொடுப்பிற்பார்ப்பார்கைக்கொள்ளாரேயென்றும்
புலைக்கெச்சினீட்டார்விடல்.

(இ-ள்.) எப்போதும் ஒருவர்தலையிற் சூடுவதற்கென்றெடுத்து வைத்த பூவை மோந்துபாரார் ஒருவர்மோந்துவைத்தபூவைத்தாம் சூடார் பார்ப்பார்பசுவைக்கொடுத்தால்அதனை வாங்கார் புலையர்க்கு எச்சிலைக் கொடார் ஆதலால் இவைகளை விடுக என்பதாம்,எ-று. (அஉ)

மோட்டுடைப்போர்வையோடேக்கழுத்தந்தாளசைப்புக்
காட்டுளேயானும்பழித்தார்மரந்தம்மின்
மூத்தவுளவாகலான்-

(இ-ள்.) காட்டினிடத்திலெயாயினும் மரங்களின்கீழேயாயினும் தம்மினும் மூத்தோர் உளராயிருப்பாராயின் அவர்க்கெதிரில் தமது மூடத்தனத்தால் தம்உடம்பின்மீது ஆடையைப்போர்த்திருத்தலும் இறுமாந்திருத்தலும் இரண்டுகால்களையும் அசைத்துக்கொண்டிருத்தலும் தகாதசெயல்களென்று பெரியோர் இகழ்ந்தார் என்பதாம், எ-று. மோட்டு என்பது மூடத்தன்மை. (அங)

நிலையிமையந்தநற்கருமஞ்செய்யுங்காலென்றும்
புலையர்வாய்நாட்கேட்டுச்செய்யார்—தொலைவில்லா
வந்தணர்வாய்நாட்கேட்டுச்செய்கவவர்வாய்ச்சொ
லென்றும்பிழைப்பதில.

(இ-ள்,) அறிவுடையோர் நிலைபெற்றநல்லகாரியங்களைச்செய்யுமிடத்து எப்போதும் புலையரிடத்தில்நாள்விஞவிச்செய்யமாட்டார் கெடுதியில்லாத அந்தணரிடத்தில் நாள்விஞவிநல்லகாரியங்களைச்செய்க ஏனெனின் அவ்வந்தணர் வாய்ச்சொற்கள் எக்காலத்திலும் பிழைப்பது இலஎன்பதாம், எ-று. (அச)

மன்றத்துநின்றுஞற்றூர்மாசுதிமிர்ந்தியங்கா
ரென்றுங்கடுஞ்சொலுரையாரிருவராய்
நின்றுழியுஞ்சொல்லார்விடல்.

(இ-ள்.) அறிவுடையோர் பெரியோர்சபையில்நின்று யாதொருஅங்கச்சேட்டையும் செய்யார் குற்றத்தைத்தருவனவாகியவாசனைப்பண்டங்களைப்பூசிக்கொண்டுநடவார் எக்காலத்திலும்கடுஞ்சொற்களைச்சொல்லார் இருவராயிருந்துபேசுமிடத்திலும் தாம்பேசார் ஆதலால்இவற்றையாவரும்ஒழியக்கடவர்என்பதாம், எ-று. (அரு)

கைசுட்டிக்கட்டுனையார்காலாலெழுத்திடார்
மெய்சுட்டியில்லாரையுள்ளாரோடொப்புரையார்
கையிற்குரவர்கொடுப்பவிருந்தேலா
ரையமில்காட்சியவர்.

(இ-ள்) சந்தேகமில்லாதஅறிவினையுடையோர் பெரியோர்முன் கை யைச்சுட்டிக்காட்டிப்பேசார் காலினால்நிலங்கீறார் கல்விமுதலியவற்றையுடை யவரோடு அவைகளையுடையரல்லாரை மெய்யெனச்சாதித்து ஒப்பிட்டுக்கூறார் பெரியோர் கொடுப்பனவற்றை உட்காந்திருந்துவாங்காரென்பதாம், எ-று.

தன்னுடம்புதாரமடைக்கலந்தனதுயிர்க்கென்
றுன்னித்துவைத்தபொருளோடிவைநான்கும்
பொன்னினைப்போற்போற்றிக்காத்துய்க்கவுய்யாக்கா
லன்றேவிழுமந்தரும்.

(இ-ள்.) தன்உடலும் மனைவியும் தன்னிடத்தில் அடைக்கலமாக ஒருவ ன்வைத்தபொருளும் தன்உயிர்க்குஉதவியாமென்று நினைத்துச்சேர்த்துவைத்த பொருளும் ஆகியஇந்தநான்கினையும் பொன்னைப்போலஒருவன்காத்தொழுகக் கடவன் அவ்வாறுஒழுகாதவிடத்து அப்போதேமிகுந்ததுன்பத்தைத்தரும் என் பதாம், எ-று. (அஎ)

நந்தெறும்புதூக்கணம்புட்காக்கையென்றிவைபோற்
றங்கருமநல்லகடைப்பிடித்துத்தங்கரும
மப்பெற்றியாகமுயல்பவர்க்காசார
மெப்பெற்றியானுமபடும்.

(இ-ள்.) ஆக்கமுள்ளஎறும்பும் தூக்கணம்பறவையும் காக்கையும் என்று சொல்லப்பட்ட இவைகளின் செயல்போல நல்லனவாகிய தமதுகருமங்களைச் சோராமற் கொண்டு அத்தன்மையாக முயல்பவர்களுக்கு இல்வாழ்க்கையின் ஒழுக்கம் எவ்வகையாலும் சிறப்படையும் என்பதாம், எ-று. (அஅ)

எறும்பானது கிடைக்காதகாலத்தில் உதவும்படி கிடைக்கின்ற காலத்தில் உணவைச்சேகரித்துக்கொள்ளும் தூக்கணம் பறவையானது குளிர் காற்று முதலியவற்றில் நின்றும் தன்னைக்காக்கும்படி கூடுகட்டிக்கொள்ளும் காக்கை யானது தன்இனத்தை அழைத்துஅவைகளோடுகூடித் தனக்குகிடைத்த உண வை உண்ணும் இவ்வாறாகஇவற்றின் செய்கையை அநுசரிப்பவர்க்கு இல் வாழ்க்கையின் ஒழுக்கம் சித்தியாகும் என்பதாம், எ-று.

தொழுதானுமவாய்புதைத்தானுமஃதன்றிப்
பெரியார்முன்யாதுமுரையார்வழியவர்
கண்ணுளோநோக்கியுரை.

(இ-ள்.) பெரியார்முன் யாதொன்றைச் சொல்லவேண்டின் வணங்கிநின்றாயினும் வாய்பொத்திநின்றாயினும் அவ்வாறுநின்றன்றி வேறுவகையாகப் பேசார் ஆதலால் நீஅவர்முன் பேசவேண்டிய நெறியை மனத்தில் ஆராய்ந்து பேசுவாயாக என்பதாம், எ-று. (௫௯)

சூதர்கழக மரவ மருக்களம்
பேதையர்களல்லார் புகாஅர் புகுபவே
லேதம் பலவுந் தரும்.

(இ-ள்.) சூதாடுமிடத்தும் ஆரவாரம் நீங்காதஇடத்தும் அறிவிலிகளல்லாதார் போகார் போவாராயின் பலதுன்பங்களும் உண்டாகும் என்பதாம் எ-று. (௬௰)

உரற்களந் துப்பட்டிலும் பெண்டிர்கண் மேலு
நடுக்கற்ற காட்சியார் நோக்காரொடுந் திசையா
ரில்லம் புகாஅர் விடல்.

(இ-ள்.) சோர்வற்ற அறிவினையுடையவர் ஆரவாரஞ்செய்யுமிடத்தும் மடைப்பள்ளியிலும் பெண்கள்வசிக்குமிடத்தும் பாரார் உரத்துச்சொல்லார் பிறர்வீட்டினுள்ளே பிரவேசியார் ஆதலால் நீயிவற்றைவிடுக என்பதாம், (எ-று.) (௬௧)

அறியாத தேயத்தா னாதுலன் மூத்தா
னிளையா னுயிரிழந்தா னஞ்சினா னுண்பா
னரசர் தொழிற்றலை வைத்தான் மணாளனென்
றொன்பதின் மர்கண்டீ ருரைக்குங்கா லாரவு
மாசாரம் வீடுபெற்றார்.

(இ-ள்.) அறியாததேசத்தையுடையவன் வறியன் மூத்தோன் சிறுவன் உயிரிழந்தவன் பயந்தோன் போசனப்பிரியன் அரசர்தொழிலில்தலைவைத்தவன் மணமகன் என்னுமிவ்வொன்பதின்மரும் ஆசாரமில்லாதவராவார் என்பதாம், எ-று. (௬௨)


அறியாததேயத்தானென்றது புண்ணியபூமியென்றெடுக்கப்பட்ட ஆரியவர்த்தமொழிந்தப்றநாட்டானையே-ம் ஆர்யவர்த்தமென்பது வடக்கே இமைய மலையையும் தெற்கே பொதிகைமலையையும் மேற்கே மேற்கடலையும் கிழக்கே கிழ்க்கடலையும் எல்லையாகவுடையதேயங்களாம் இந்தஆரியவர்த்தமொழிந்ததேசத்தாருடைய ஆசாரங்கள் சிஷ்டாசாரமாகக்கொள்ளப்படாமையால் அறியாததேயத்தானும் கொடிதுகொடித கொடிது என்றபடிவறுமை ஆசாரமிழக்கச,

செய்யும் ஆதலால் ஆதுலனும் கிழவர்களும் சிறுவர்களும் ஆசாரத்தை அடிக்கும் வலியிலராகையால் மூத்தானும் இளையானும் உயிர்நீங்கியபின் உடலாசிரமுதலியவற்றை அறியாதாதலால் உயிரிழந்த சரீரத்தானும் பயந்தவன் ஆசாரத்தைக்கைக்கொள்ளான் ஆதலால் அவனும் உணவையே பெரிதாகநினைப்பவன் பசிபொறான் ஆதலால் உண்பானும் அரசர்கள் தொழிலைச்செய்யமேற்கொண்டவர்கள் அத்தொழிலின் நிர்ப்பந்தத்தால் ஆசாரம் தவரக்கூடும் ஆதலால் அவர்களும் மணமகன் கலியாணக்களிப்பால் ஆசாரநிர்ப்பந்தத்தைக்கவனியான் ஆதலால் அவனும் ஆகிய ஒன்பதின்மரும் ஆசாரம்நீங்கப்பட்டவரென்று சொல்லப்பட்டார். என்பதாம்.

தேவர்வழிபாடுதீக்கனவாலாமை
யுண்டதுகான்றல்மயிர்களைதலூண்பொழுது
வைகுதுயிலோடிணைவிழைச்சுக்கீழ்மக்கள்
மெய்யுறலேனையிழிந்து
வையுறுதாடுகநீர்.

(இ-ள்.) தேவாலயங்களுக்குச் செல்லல் தீக்கனாக்காணுதலாகிய சொப்பனம் அசுத்தசம்பந்தம உண்ட அன்னத்தை வாந்திபண்ணுதல் க்ஷௌரஞ்செய்துகொள்ளல் அன்னம் உண்ணும் காலம் நித்திரைசெய்தல் மனைவியோடு சங்கமம்பண்ணுதல் புலையர்கள் சரீரசம்பந்தம் ஆகிய இப்பத்துவிதத்தும் சிறிதேனும் சந்தேகமில்லாது நீராடக்கடவரென்பதாம், எ-று [illegible] எனபது அசுத்தம.
(௱)





சிவமயம்.

இலக்குமிசரஸ்வதி

இவ்விருவர்களின் தாரதம்மிய விஞவிடை.

இஃது

வீரசைவசித்தாந்தகுலதீபமாகிய

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகளால்

இயற்றியது.

கலைமகளைமருமகளாக்காதலித்துக்கொண்டவிந்தக்கனகமங்கை
சிலைமகளைத்தன்கணவன்றங்கையெனப்பெற்றதிருச்செழியநங்கை
தலையுலகிற்கலையுணர்வார்க்கருந்தனங்கள்தாராததன்மையென்னே
நிலையுணராப்புல்லியர்பாலிவர்செலவுந்தனமுதவுநெறிதானென்னே. (௧)

அருமைமருமகளிடத்துங்குறைநினையாமாமியிந்தவகிலத்தில்லை
பெருமையினாலிவர்சமமாம்வரிசையினாற்பேதமுறும்பெற்றியாலே
திருவனையாரிவளொருமித்தருள்செய்தாலிகபரங்கள்சித்தியாகும்
ஒருமையிவர்க்குண்டாகத்தலைவர்களேசமனோக்கமுதவவேண்டும். (௨)

மகளின்பருமகளதிகமெனவுலகம்பாராட்டும்வரிசையானும்
மிகவரியபதங்களிலேயிவர்மருவியருள்நிறைந்துவிளங்கலாலும்
தகைமையுறவுலகமெலாம்மன்மேலும்பலவளங்கள்தழைதலானும்
அகனமர்ந்தெழுளத்திருந்துதனங்கல்வியிரண்டுமிவணருள்செய்வாரோ ( )

திருமகளைக்கலைமகளும்பலமறையாற்றுதிசெய்துதிகழ்தலானும்.
மருமகளையரியபதத்திருத்தியுயர்வளமையுறவைத்தலானு
மிருவீருமுள்ளன்புடையாரெனமதித்தோமியாமினியிங்கினிமையாக
வொருமையுறவுளத்திருத்தியிருபொருளும்பெறலாகுமுறுதியீதே. ( )

கலைமகளைப்போற்றினர்க்கிங்கறம்பொருளின்பம்வீடுகொட்டுந்தீம்பா
லலைமகளைவாழ்த்தினர்க்குமிம்மையிலேநாற்பயனுமளித்துக்காக்கு
மலைமகளையேத்தினர்க்குப்பவமகன்றுமுத்திபெறுவழியுண்டாகு
நிலைமையிதுநான்மறையாகமங்களெலாநிச்சயித்துநிகழ்த்துமன்றே (௫)

வன்னெஞ்சக்கொடியவர்பால்மலர்மங்கையிருந்துதனம்வழங்கக்கண்டோம்
நன்னெஞ்சமில்லவர்பாற்கலைமங்கையிருந்தொருநாளுங்காணோம்
கன்னெஞ்சக்கொடியோர்நல்லோர்பொருளைவஞ்சனையாற்கவர்ந்துகொள்வா
ரின்னெஞ்சநல்லோர்தங்கலைப்பொருளையினிதாகவெவர்க்குமீவார் (௬)

உலகுயிர்க்கெல்லாந்தாயாமிவர்தகைமையானெடுத்திங்கோதற் [illegible]ற்றே,
குலமகனல்லாலெவர்கள்குரவர்மறையையெடுத்துக்கூறவல்லார்
பலநலனும்புதல்வருக்கல்லாலெவர்க்குத்தாய்தந்தைபரிக்கின்றார்
புலனுடையமகன்குரவர்க்கியற்றுகைமாறிதில்வேறென்புகலத்தானே

ஆதலினாற்றிருத்தாயேவஞ்சகனாயகன்றுநல்லோரகத்திருந்து
மேதகையதனமாதி*பதினாறுபேறுதவவேண்டுகின்றேன்
நீதியிதுகலைமகள்வாழ்மனைகளெலாமேலாகநெடிதிங்கோங்கும்
பாதகஞ்செய்வஞ்சகரும்பவமகன்றுநன்மையுறபபாலிப்பாயே (௮)

என்னிருகண்மணியானபொன்மாதுங்கலைமாதுமினிதுவாழ்க
மன்னியநற்செல்வர்களுங்கலைஞர்களுமேன்மேலுமருவிவாழ்க
பன்னியவஞ்சகமொழியநல்லோர்கள்நாடோறுமபல்கிவாழ்க [௧. (௯)
வின்னியவிவ்வினாவிடையின்பொருளுணர்ந்துபோற்றுமன்பரினிதுவாழ்

வினாவிடை முற்றிற்று.

(௮-வது செய்யுளிற்கூறிய)

பதினாறுபேறு-என்பது.

*மறைகள்நிந்தனைசைவநிந்தனைபொறாமனமும்
தறுகணைம்புலன்வழியிலேச்செல்லுறாந்தகையும்
பிறவிதீதெனாப்பேதையர்தம்மொடுபிணங்கும்
உறுதிநல்லறஞ்செய்பவர்தங்களோடிரவும (௧)

யாதுநல்லன்பர்கேட்கினுமுதவிடுநலனு
மாதவத்தினோரெறுக்கினும்வணங்கிடுமகிழ்வுந்
மோதுநல்லுபதேசமெய்யுறுதியுமன்பர்
தீதுசெய்யினுஞ்சிவச்செயலெனக்கொளுந்தெளிவும் (௨)

மனமும்வாக்குநின்னன்பர்பாலொருப்படுவளனும்
கனவினுமுனதன்பருக்கடிமையாங்கருத்து
நினைவின்வேறொருதெய்வத்தைவழிபடாநிலையும்
புனிதநின்புகழ்நாடொறுமுரைத்திடும்பொலிவும் (௩)

தீமையாம்புறச்சமையங்களொழித்திடுதிறனும்
வாய்மையாகவேபிறன்பொருள்நச்சிடாவளனு
மேமுறும்பிறதாரநச்சிடாதநன்னோன்பும்
தூய்மைநெஞ்சினிலியானெனச்செருக்குறாத்துறவும் (௪)

துறக்கமீதுறைகினுநரகிற்றோய்கினு
மிறக்கினும்பிறக்கினுமின்பந்துய்க்கினும்
பிறைக்கொழுந்தணிசடைப்பெருமவிவ்வரம்
மறுக்கிலாதெனக்குனீவழங்கல்வேண்டுமால் (௫)

சரஸ்வதி அம்பிகைபஞ்சரத்தினம்

பழநாபுரி

மாம்பழக்கவிச்சிங்கநாவலரால்

இயற்றியது.

சீர்கொண்டசெப்பொற்சிலம்பணை [illegible]
தெரிசனமெனக்கருதினர் கொடுக்கெனவெளியவை [illegible]
கார்கொண்டகனபருவகாலமுகில்போலமு [illegible]
கனிவிளைந்துபொழியவென் வாக்கினிற்குடி [illegible] புரிதல்வேணுமே
பார்கொண்டவேயபரிபால கருணைப்ரபாகரா [illegible]
பலதேவகணமிறைஞ்சுபடிகாதநற்பா [illegible]
நீர்கொண்ட [illegible]
நாதசட்பதவேணியே [illegible]

அன்னைநின்கருணைகடாக்ஷ [illegible]
அதுகொண்டு [illegible]
சன்னையொன்றறியாகசந்த [illegible]
சரசமதுரப்ரபந்த [illegible]
வென்னையிங்கிப்படியிடாக்கடைப்புகு [illegible]
இனிநீபராமுகஞ்செயப் [illegible]
நன்னயசாருதகளா [illegible]
நாதசட்பதவேணியே [illegible]

சம்பந்தரப்பாக்கந்தரருணகிரி பாடத்தழை [illegible]
சரதமாணிக்கவாசகர்சிரப்பிரசாதசா [illegible]
கும்பந்தமிக்கமுசசங்கநன்றுவலாகு [illegible]
கோதிலாவாணாகளேவோருந்னை [illegible]
வெம்பந்தபவராகிதவீடுன்றலை [illegible]
மெய்யானதெய்வ நீட்டிதலாலென்னையிங்க [illegible]
நம்பந்தமுனிவாபணதீபமேயெவ் வுலகு [illegible]
நாதசட்பதவேணியே [illegible]

சரஸவதிஅயபிகைபஞசரத்தினம

காளிதாசனபாணகவிவீமகவிதணடிசட்டுரொபபட்டுமூாததி
கமபனுயாபுகழேந்திகாளமேகநசொறகணிநசவொட்டககூததனென்
றுளிமேநாகுமிவரில [illegible] ருமுனைபபொ [illegible] றியல் [illegible] நிலைமெபெற்றூா
அப்படிததமியேனையு தொண [illegible] சமையமமமே
[illegible] யோடிசசிகர [illegible] ரிப்ப
பாணபிலைய [illegible] சாறுமை [illegible] மனதருணீ
காளிமே [illegible] துரொறுமை [illegible] னமே
[illegible] பாலினிநானமுகததமிழ்வாணியே.

அகவிருள [illegible] நுணபிதுதீதிதென்
றறுதினமதி [illegible] தமகுத
[illegible] நாலுகூடுமோ
[illegible] யுநதநதகாபபாய
[illegible] சயவாழ்வே
சுமுகசந [illegible] சொரூப
[illegible] யோகராக மே
[illegible] சகபாணிஞான [illegible] தமிழ்வாணியே

[illegible] பஞசரத்தின [illegible]

முற [illegible]

இப்புத்தகம், சாலிவாகன சாபதம் [illegible] கலியுகாப்தம் [illegible] இத [illegible] மேல செலலாநினற விகாரி [illegible] உளவை சோமவாரம சஷ்டி [illegible] நாழிகை அனுசம நக்ஷத்திர நாழிகை [illegible] கருமேல அமிர்த நாழிகை இந்த சுபயோக சுபதினத்தில [illegible] சியமலககினததில தஞசை ஸ்ரீ கிருஷணவிலாச அச்சியநதிர சாலையில பதிபபிககபபட்டது.

இதறகுமுனன அச்சிட்டபுத்தகங்களாவன.

திருவிளையாடறபுராணம
திருப்பரங்கிரிப்புராணம
திருககுறள மூலமும உரையும்.
முதுமொழிககாஞசி மூலமும உரையும
பதுறறுப்பத்தந்தாதி.
திருவிளையாடறபோற்றிக்கலிவெணபா.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்
௧	௫	என்பது	என்பதும்.
௭	௨௰௫	பிணியால்த்துன்பம்	பிணியால் துன்
௮	௨௰௬	கரல்	கால்.
௯	௰௬	ஒழுக்கத்தில்த்	ஒழுக்கத்தில்.
௯	௨௰௯	தோன்று	தொன்று.
௰	௯	வை யினுலும்	வகையினுலும்.
௰௩	௨௰௭	பழய	பழைய.
௰௪	௧	விரும்வுவோர்	விரும்புவோர்.
ஷை	ஷை	கிறுகாலே	சிறுகாலே
௰௬	௰௮	காட்டில்த்	காட்டில்
ஷை	௨௰௫	உளரில்லாத	ஊரில்லாத.
ஷை	௨௰௬	பழய	பழைய.
ஷை	௩௰௪	போகின்றீரோன்று	போகின்றீரொன்று.
௨௰	௨௰௮	செவியில்ச்	செவியில்.
௨௰௧	௰௮	காதினுலக	காதினுல்.
ஷை	௩௰௪	விட்டில்	வீட்டில்.
௨௰௪	௬	புலேபக்ருக்கு	புலேயருக்கு.
ஷை	௰௧	காட்டினிடத்திலெயாயி னும்	காட்டினிடத்திலே னும்.